**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 187/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்புலெட்சுமி | க–பெ | அழகப்பன் |
| ஊர்: | : | பள்ளத்தூர் | சமயம் | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கேட்டரிங் தொழில் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.07.2026**

------------------------------------------------------------------------------------------------------

**07.07.2026**

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் 8 வது வரை படித்துள்ளேன், கேட்டரிங் தொழில் செய்கிறேன். எதிரி எனது உறவினாரா என்றால் இல்லை, பழக்கம். எதிரி எனக்கு எவ்வளவு காலம் பழக்கம் என்றால் சுமார் 20 வருடங்களாக குடும்பம் மூலமாக பழக்கம் ஆகும். எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் எனது வீட்டில்வந்து தேதி குறிப்பாக நினைவில்லை, 05.01.2022 ல் பணம் கொடுத்தேன், அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கடன் கேட்டார். எதற்காக பணம் கேட்டார் என்றால் எதிரி அவரது தொழில் தொடர்பாக பணம் கேட்டார். நான் பணம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் என் கணவர் காசோலை மூலமாக ரூ. 50,000/– எதிரிக்கு கொடுத்தார். ரூ. 50,000/– கொடுத்த தேதியில் ஏதாவது ஆவணம் பெற்றேனா என்றால் ஆக்சிஸ் வங்கி காசோலை எதிரி கொடுத்தார். ரூ.50,000/–க்கு எவ்வளவு வட்டி என்றும் எவ்வளவு நாட்களில் திருப்பி தருவதாக கூறினார் என்றால் சீக்கிரம் தருவதாக கூறினார். வட்டி 1.5 சதவீதம் வட்டி தருவதாக கூறினார்.

2) பணம் கொடுக்கும்போது வட்டி எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி ரூ.50,000/–ற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார் என்றால் பிப்ரவரி 2022 வரை வட்டி கொடுத்தார், அதன் பின்பு 10.03.2022 ல் ரூ.2,00,000/– மீண்டும் தொழிலுக்கு

கேட்டதால் கொடுத்தேன். அதற்கு வட்டி எவ்வளவு என்றால் 1.5 சதவீதம். அதற்கு ஆவங்கள் பெற்றேனா என்றால் இல்லை. ஏற்கனவே ரூ.50,000/- அசலை திருப்பி தராதபட்சத்தில் எந்த அடிப்படையில் பணத்தை கொடுத்தேன் என்றால் பணம் வலியுறுத்தி கேட்டார் மற்றும் தெரிந்த நபர் என்பதால் கொடுத்தேன். கடன் கொடுத்ததில் இருந்து 3 ஆண்டுகள் வரை எதிரி எந்த அசல் தொகையும் கொடுக்கவில்லை என்றால் 2024 பிப்ரவரி வரை வட்டி தொகை கொடுத்தார், அசல் தொகை எதுவும் கொடுக்கவில்லை. அதன் பின் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். விசாரணையின்போது என்ன கூறினார்கள் என்றால் விசாரணையின்போது எதிரி பணம் தருவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார் அதன் படி எந்த தொகையும் கொடுக்கவில்லை. 3 முறை புகார் கொடுத்து 3 முறை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி ஆவணம் கொடுத்திருக்கும்போது எதற்காக ஆவணம் மூலம் நடவடிக்கை எடுக்காமல் காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் பணத்தை பெறவேண்டும் என்பதற்காக காவல்நிலையம் அனுகிறேன். எதிரிக்கு கொடுத்தாக கூறும் ரூ. 2,50,000/- தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது கேட்டரிங் மூலம் வைத்திருந்தேன். எதிரிக்கு கொடுத்தாக கூறும் தொகை வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேன். அதை காண்பிப்பதற்கு வங்கி பரிவர்த்தனையை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் வங்கியில் இருந்து எடுத்து தரவில்லை. என் வங்கி மூலமாக அதிகபட்சமான பரிவர்த்தனை எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 10,000/- முதல் 15,000/- இருக்கும். காவல் நிலையத்தில் புகார்கொடுத்தும் எதிரி பணம் தராததால்தான் காசோலையை பயன்படுத்தி வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.18 15:04 0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.